கூடுதல் சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்.
முன்னிலை – **திரு.எம்.விக்னேஷ் பிரபு, எம்.எல்.,**
**கூடுதல் சார்பு நீதிபதி, செய்யாறு.**

2025 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள், 2ஆம் நாள் புதன்கிழமை
I.A.No.1/2025 in O.S.No.362/2019

1. ஜெயராமன்(இறப்பு)
2. ஞானசேகரன்,
3. ஸ்ரீதர்,
4. ராம்குமார்,
5. சுரேஷ்குமார்,
6. ராணிஅம்மாள், . . . மனுதாரர்கள்/வாதிகள்

/எதிராக/

1. ராணிஅம்மாள்,
2. ரமேஷ்,
3. செல்வம்,
4. சுந்தர்,
5. வெங்கடேசன், . . . எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது இந்நீதிமன்றத்தில் 25.03.2025 ஆம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.சந்திரசேகரன் அவர்கள் முன்னிலையாகியும் 1, 3 முதல் 5 வரையான எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. K. விஸ்வநாதன் அவர்கள் முன்னிலையாகியும், 2ம் எதிர்மனுதாரர் இந்நீதிமன்றத்தில் அழைத்தும் முன்னிலையாகாததால் ஒருதலைப்பட்சமாக்கப்பட்டும், இருதரப்பு வாதுரைகளை கேட்டும், சான்றாவணங்களைப் பரிசீலித்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

## உத்தரவு

மனுதாரர் தரப்பில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 18 விதி 17–ன் கீழ் பி.வ.சா.1ஐ திரும்ப அழைத்து குறுக்கு விசாரணை செய்ய

வேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## 2. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்

மனுதாரர்கள் அசல் வழக்கில் வாதிகள் என்றும், எதிர்மனுதாரர்கள் பிரதிவாதிகள் ஆவார். இவ்வழக்கானது பிரதிவாதிகள் தரப்பு கூடுதல் சாட்சியத்திற்காக நிலுவையில் உள்ளது என்றும், இவ்அசல் வழக்கில் பி.சா.1ஐ குறுக்குவிசாரணை செய்து குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்கு கடந்த 25.10.2024 அன்று உத்திரவிடப்பட்டிருந்தது என்றும், அன்றைய தினம் வழக்கறிஞரின் அசாதாரன சூழ்நிலை காரணமாக அன்று நீதிமனறததிற்கு வரயிலவில்லை என்றும், மேலும் மனுதாரர்களும் நீதிமன்றத்தில் ஆஜராகததினால் 1ம் பிரதிவாதியின் குறுக்குவிசாரணை தொடர்ச்சி Close செய்யப்பட்டுள்ளது என்றும், 1ம் பிரதிவாதியை குறுக்கு விசாரணை செய்ய தங்கள் தரப்பில் தயாராக உள்ளனர் என்றும், எனவே ஒரு வாய்ப்பளிக்குமாறு தங்களிடம் மனுதாரர்கள் தரப்பில் பணிந்து பிராத்திக்கப்படுகிறது என்றும், இந்த சாட்சியை விசாரித்து தமது தரப்பின் உ்ண்மையை தெரியப்படுத்தவேண்டியது தம்மிட பொறுப்பு என்றும், ஆதலின் இவ்வழக்கில் கோர்ட்டில் விசாரித்து விளக்கவேண்டியது தன்னுடைய கடமையாகும் என்றும், தமது தரப்பிற்கு போதிய வாய்ப்பளித்து மறைக்கப்பட்ட உண்மைகளை வெளிக்கொணர்ந்து தமது தரப்பின் நியாயத்தை வெளிப்படுத்தவேண்டி உரிய வாய்ப்பளிக்குமாறு மன்றாடி வேண்டுவதாகவும், இதனால் வழக்கில் தமது தரப்பு 100% வெற்றிபெற வாய்ப்புள்ளது என்றும், ஆதலின் தமது தரப்பில் விசாரிக்கவேண்டியவர்களை விசாரித்தால்தான் தமது தரப்பு நியாயத்தை வெளிப்படுத்த முடியும் என்றும், 1ம் பிரதிவாதியின் சாட்சியத்தை அழைத்து விசாரித்து தனது தரப்பினை மெய்ப்பிக்கவேண்டி மீண்டும் அழைத்து

விசாரிக்க இந்த சாட்சியை Recall செய்து தனக்கு அனுமதி வழங்க பணிவுடன் கோரப்பட்டு மனுதாரரால் மனு தாக்கல்.

**3. எதிர்மனுதாரர் தாக்கல் செய்யும் ஆட்சேபணையின் சுருக்கம்**

மனுதாரர்களின் மனு பொய்யானது, மோசவிதமானது என்றும், சட்டப்படி செல்லத்தக்கவை அல்ல தள்ளுபடி செய்யப்படவேண்டிய ஒன்றாகும் என்றும், மனுதாரர்கள் மனுவில் கூறியுள்ள சங்கதிகளில் இவ்எதிர்மனுதாரர்கள் ஒப்புக்கொள்ளும் சங்கதிகளை தவிர மற்றவற்றை மனுதாரர்களே நிரூபிக்க கடமைப்பட்டவர் என்றும், மனுதாரர் மனுவில் கடந்த 25.10.2024 அன்று வழக்கறிஞரின் அசாதாரண சூழ்நிலை காரணமாக ஆஜராக முடியவில்லை என என்ன காரணம் என்பதை தெளிவாக குறிப்பிடாமல் பொத்தம் பொதுவாக ஒரு காரணத்தை மனுதாரர் குறிப்பிடுகின்றார் என்றும், எந்த ஒரு மனுவும் உரிய காரணங்கள் இல்லாமல் தொடரப்பட்டால் அந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என உயர்நீதிமன்றம் மற்றும் உச்சநீதிமன்றம் பல வழக்குகளில் தீர்ப்புகள் உள்ள நிலையில் இந்த மனுவும் காரணங்கள் எதையும் தெளிவாக குறிப்பிடாமல் தொடரப்பட்டுள்ள நிலையில் மனுதாரர் மனுவும் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும், மனுதாரருக்கு பல வாய்த்தாக்கள் குறுக்கு விசாரணை செய்வதற்காக அவகாசங்கள் கனம் கோர்ட்டார் அவர்களால் வழங்கப்பட்டுள்ள நிலையில் அவைகளை மனுதாரர் பயன்படுத்திக் கொள்ளாமல் இவ்வழக்கை விரைவில் முடிப்பதற்கு மனுதாரருக்கு எண்ணம் இல்லாத காரணத்தினால் இதுபோன்ற மனுக்களை தொடர்ந்து வழக்கை தாமதப்படுத்த முயற்சிக்கின்றார் என்றும், எனவே மனுதாரர் மனு எவ்வித காரணங்களும் இல்லாமல் தொடரப்பட்டதினால் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றும், மனுதாரர்களின் மனு நிலைக்கத்தக்கதல்ல

என்றும், இவ்எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யுமாறு வேண்டி எதிர்மனுதாரர்கள் பரம் எதிர்உரை தாக்கல்.

4. இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சினை என்னவென்றால், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

5. இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. இருதரப்பில் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை. மனுதாரர்கள் அசல் வழக்கில் வாதிகள், எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கில் பிரதிவாதிகளாவார்கள். மனுதாரர்கள் வாதியாக இருந்து, எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு சொத்தை பொறுத்து ஏற்றதை ஆற்றுகை பரிகாரம் மற்றும் இதர பரிகாரங்களுக்காக வழக்கு தாக்கல் செய்து அந்த வழக்கில் எழுவினாக்கள் வனையப்பபட்டு, வாதிகள் தரப்பில் வா.சா.1 முதல் வா.சா.6 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, வாதிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு, பிரதிவாதி தரப்பில் பி.சா.1 சாட்சி விசாரிக்கப்பட்டு பி.சா.1ஐ வாதிகள் தரப்பில் பகுதியாக குறுக்குவிசாரணை செய்யப்பட்டு விசாரணை நாளன்று வாதிகள் தரப்பில் வாதிகள் ஆஜராகாததாலும், வாதிகளின் வழக்கறிஞரும் ஆஜராகாததாலும், பி.சா.1ன் சாட்சியமானது முடிக்கப்பட்டது. பி.சா.1ஐ முழுமையாக குறுக்குவிசாரணை செய்ய மீண்டும் அழைத்து விசாரிக்க வேண்டும் என்று மனுதாரர்கள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள். விசாரணை நாளன்று வழக்கறிஞர் மற்றும் மனுதாரர்களின் அசாதாரண சூழ்நிலை காரணமாக வரஇயலவில்லை என்றும் அதனால் அன்றைய தினம் சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய முடியவில்லை என்றும், மனுதாரர்கள் தரப்பில் காரணம் கூறப்பட்டுள்ளது. பி.சா.1ல் எதிர்தரப்பினர்

முழுமையாக குறுக்குவிசாரணை செய்யும் பட்சத்தில் தான் வழக்கு பற்றிய முழு விவரமும் இந்நீதிமன்றத்திற்கு தெரியவரும் என்பதாலும், மனுதாரர்கள் மனுவில் கூறியுள்ள காரணத்தை ஏற்றும், மனுதாரர்கள் தங்களது வழக்கினை கட்சி செய்யும் பொருட்டும், மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித இழப்பும் ஏற்பட வாய்ப்பில்லை என்பதாலும், அசல் வழக்கில் பலதரப்பட்ட இடைக்கால மனுக்களை தவிர்த்திடும் பொருட்டும், அசல் வழக்கினை விரைந்து முடித்திடும் பொருட்டும், பி.சா.1 ஐ மீண்டும் அழைத்து தொடர்ந்து குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கவேண்டும் என்று மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனுவானது நீதியின் நலன் கருதி கீழ்கண்ட நிபந்தனைகளுடன் அனுமதிக்கப்படுகிறது.

1. பி.சா.1 இந்நீதிமன்றத்தில் ஆஜராகும் நாளன்றே மனுதாரர்கள் தரப்பில் குறுக்குவிசாரணை செய்து அன்றைய தினமே குறுக்கு விசாரணை முடிக்கவேண்டும்.

இறுதியாக மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனுவானது மேற்கண்ட நிபந்தனையுடன் செலவுதொகையின்றி அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்த பின்னர் 2025-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 2-ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒம்/- (எம்.விக்னேஷ்பிரபு)
கூடுதல் சார்பு நீதிபதி,
செய்யாறு.

**மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் ஆவணங்கள் : இல்லை**

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் ஆவணங்கள் : இல்லை**

ஒம்/– (எம்.விக்னேஷ்பிரபு)
கூடுதல் சார்பு நீதிபதி,
செய்யாறு

/உண்மைநகல்/
ஒம்/– (எம்.விக்னேஷ்பிரபு)
கூடுதல் சார்பு நீதிபதி,
செய்யாறு